# இயல் 1 - 1.2 தமிழ்ச்சொல் வளம்


## வினா விடைகள்

1. **தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்களை எழுதுக.**

**அடிவகை**

- தாள் - நெல், கேழ்வரகு
- தண்டு - கீரை, வாழை
- கோல் - நெட்டி, மிளகாய்ச்செடி
- தூறு - குத்துச்செடி, புதர்
- தட்டு அல்லது தட்டை - கம்பு, சோளம்
- கழி - கரும்பு
- கழை - மூங்கிலின் அடி
- அடி - புளி, வேம்பு

***எளிதில் நினைவில் கொள்ள (எழுத வேண்டாம்)**



2. **தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**

**கிளைப் பிரிவுகள்**

- கவை - அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
- கொம்பு அல்லது கொப்பு - கவையின் பிரிவு
- கிளை - கொம்பின் பிரிவு
- சினை - கிளையின் பிரிவு
- போத்து - சினையின் பிரிவு
- குச்சு - போத்தின் பிரிவு
- இணுக்கு - குச்சியின் பிரிவு

3. **காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**

**காய்ந்த அடியும் கிளையும் பெயர் பெறுதல்**

- சுள்ளி - காய்ந்த குச்சு
- விறகு - காய்ந்த சிறுகிளை
- வெங்கழி - காய்ந்த கழி
- கட்டை - காய்ந்த கொம்பு, கவை, அடி

4. **தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

**இலை வகை**

- இலை - புளி, வேம்பு
- தாள் - நெல், புல்
- தோகை - சோளம்,கரும்பு
- ஓலை - தென்னை, பனை
- சண்டு - காய்ந்த தாள், தோகை
- சருகு - காய்ந்த இலை
- ஓலை - தென்னை, பனை

*எளிதில் நினைவில் கொள்ள (எழுத வேண்டாம்)

**நினைவில் நிற்க! (இலை வகை)**

| | | |
|---|---|---|
| இலை | சண்டு | தாள் |
| ஓலை | சருகு | தோகை |

5. **தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

**கொழுந்து வகை**

- துளிர் அல்லது தளிர் - நெல், புல்
- முறி அல்லது கொழுந்து - புளி, வேம்பு
- குருத்து - சோளம், கரும்பு, தென்னை, பனை
- கொழுந்தாடை - கரும்பின் நுனிப்பகுதி

6. **பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

- அரும்பு - பூவின் தோற்ற நிலை
- போது - பூ விரியத் தொடங்கும் நிலை
- மலர் அல்லது அலர் - பூவின் மலர்ந்த நிலை
- செம்மல் - பூ வாடிய நிலை
- வீ - மரம், செடியிலிருந்து பூ விழுந்த நிலை

7. **தாவரத்தின் பிஞ்சு வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

**பிஞ்சு வகை**

- பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு
- பிஞ்சு - இளம் காய்
- வடு - மாம்பிஞ்சு

- மூசு - பலாப் பிஞ்சு
- கவ்வை - எள் பிஞ்சு
- குரும்பை - தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு
- முட்டுக் குரும்பை - சிறு குரும்பை
- இளநீர் - முற்றாத தேங்காய்
- நுழாய் - இளம்பாக்கு
- கருக்கல் - இளநெல்
- கச்சல் - வாழைப்பிஞ்சு

**8. தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்கள், கனிகள்) சொற்களை எழுதுக.**

**குலை வகைகள்**

- கொத்து - அவரை, துவரை
- குலை - கொடிமுந்திரி
- தாறு - வாழைக்குலை
- கதிர் - கேழ்வரகு, சோளம்
- அலகு அல்லது குரல் - நெல், தினை
- சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி

**9. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்களை எழுதுக.**

**கெட்டுப்போன காய்கனி வகை**

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்
- சொத்தை - புழு பூச்சி அரித்த காய் அல்லது கனி
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அளியல் - குளுகுளுத்த பழம்
- அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
- சொண்டு - பதராய்ப் போன மிளகாய்
- கோட்டான் காய் அல்லது கூகைக்காய் - கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்டகாய்
- தேரைக்காய் - தேரை உட்கார்ந்ததினால் கெட்டகாய்

- அல்லிக்காய் - தேரை உட்கார்ந்ததினால் கெட்டகாய்
- ஒல்லிக்காய் - தென்னையில் கெட்டகாய்

**10. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்களை எழுதுக.**

**பழத்தோல் வகை**

- தொலி - மிக மெல்லியது
- தோல் - திண்ணமானது
- தோடு - வன்மையானது
- ஓடு - மிக வன்மையானது
- குடுக்கை - சுரையின் ஓடு
- மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி
- உமி - நெல், கம்பின் மூடி
- கொம்மை - வரகு, கேழ்வரகின் உமி

**11. தானியங்களுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**

**தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்**

- கூலம் - நெல், புல் (கம்பு) முதலிய தானியங்கள்
- பயறு - அவரை, உளுந்து முதலியவை
- கடலை - வேர்க்கடலை. கொண்டைக்கடலை முதலியவை
- விதை - கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து
- காழ் - புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து
- முத்து - வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து
- கொட்டை - மா, பனை முதலியவற்றின் வித்து
- தேங்காய் - தென்னையின் வித்து:
- முதிரை - அவரை, துவரை முதலிய பயறுகள்.

**12. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களை எழுதுக.**

**இளம் பயிர் வகை**

- நாற்று - நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை
- கன்று - மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை
- குருத்து - வாழையின் இளநிலை
- பிள்ளை - தென்னையின் இளநிலை

- குட்டி - விளாவின் இளநிலை
- மடலி அல்லது வடலி - பனையின் இளநிலை
- பைங்கூழ் - நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர்.

13. தமிழ்நாடு பொருள் வளம் உடையது என்பதற்கான சான்றுகள் யாவை?
    - தமிழ்நாடு எத்தனை பொருள் வளம் உடையது என்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.
    - பிற நாடுகளில் உள்ள கூலங்கள் எல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாக இருக்க தமிழ்நாட்டில் உள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.
    - கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளே உண்டு.
    - பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையாவிடினும் அருமையான கூலங்களும் சிறு கூலங்களும் இன்றும் தென் தமிழ்நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.
14. பண்டைத் தமிழர்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவர் - பாடத்தின் வழி விளக்குக.
    - ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கப்படியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
    - நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்.
    - திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.
    - பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பபொருட் சொற்களும் நுண்பொருட்

சொற்களும் அமைத்துக் கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.